**செய்தி வெளியீடு எண்: 060** **நாள்: 23.01.2020**

**சென்னை, தரமணியில் இன்று (23.1.2020) டிட்கோ மற்றும் டி.எல்.எப். நிறுவனம் இணைந்து உருவாக்கவிருக்கும் தகவல் தொழில் நுட்பம் மற்றும் அதனைச் சார்ந்த பணிகளுக்கான DLF Down Town Chennai வளாகத்திற்கு அடிக்கல் நாட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை.**

**மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி,**

**இந்த விழாவிற்கு வருகை புரிந்துள்ள**

மாண்புமிகு துணை முதலமைச்சர் **திரு. ஓ. பன்னீர்செல்வம்** அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டு இருக்கின்ற

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்
**திரு. எம்.சி.சம்பத்** அவர்களே!

தொழில் துறை முதன்மைச் செயலாளர்
**திரு. நா.முருகானந்தம்** அவர்களே!

டிட்கோ நிறுவனத்தின்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்
**திருமதி. காகர்லா உஷா** அவர்களே!

டி.எல்.எப். நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர்
**திரு. ஶ்ரீராம் கட்டார்** அவர்களே!

டி.எல்.எப். நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர்
**திரு. மோஹித் குஜ்ரால்** அவர்களே!

மற்றும் நிகழ்ச்சியிலே பங்கு பெற்று இருக்கின்ற

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

தொழில் அதிபர்களே!

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் இன்னொரு மைல்கல்லாக டிட்கோ மற்றும் டி.எல்.எப். நிறுவனம் இணைந்து உருவாக்கவிருக்கும் தகவல் தொழில்

நுட்பம் மற்றும் அதனைச் சார்ந்த பணிகளுக்கான **DOWN TOWN Chennai** வளாகத்திற்கு அடிக்கல் நாட்டும் விழாவில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

I am happy to attend the foundation stone laying function for construction of DLF, **DOWN TOWN Chennai**, a joint venture project of TIDCO and DLF, for housing I.T. and I.T.E.S. organisations under one roof.

I congratulate everyone for making this new beginning today. This event marks an example for the commitment of Puratchi Thalaivi Amma's Government in coordinating with all the stakeholders in a very positive manner to promote further industrial growth in the State.

Due to the constant efforts of my Government, many new investment projects are being commenced successfully in Tamil Nadu. Within a span of one year, we are able to support the beginning of commercial production of 59 GIM Projects. Another 213 projects are under various stages of implementation.

**"அரும்பும் வேர்வை உதிர்த்துப் – புவி மேல்**
**ஆயிரம் தொழில் செய்திடுவீரே"**

என்றார் மகாகவி பாரதியார் அவர்கள். இவரது பாடல் வரிகளுக்கு ஏற்ப, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு மேற்கொண்டு வரும் தொடர் முயற்சிகளால் பல புதிய தொழில் முதலீடுகளை தமிழ்நாடு தொடர்ந்து ஈர்த்து தொழில் துறையில் முன்னணி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. இரண்டாம் உலக முதலீட்டாளர் மாநாடு நடைபெற்ற ஒரே ஆண்டில் 59 திட்டங்கள் தங்கள் வணிக உற்பத்தியைத் துவக்கியுள்ளன. மேலும், 213 திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன.

வெற்றிகரமாக நடத்தப்பட்ட உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்குப் பிறகு, இதுவரை 19 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் 63 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

போடப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் **83** ஆயிரம் வேலை வாய்ப்புகள் புதிதாக உருவாக்கப்பட உள்ளன.

''**தமிழகத்தை உலகளவில் உற்பத்தி மையமாக மாற்றும் தொலைநோக்குடன் நான் செயல்பட்டு வருகிறேன். இந்த லட்சியத்தை நிறைவேற்றும் முனைப்பில், எனது அரசு ஏற்கனவே ஈடுபட்டுள்ளது. சிறந்த ஆட்சி நிர்வாகம் மூலம் இந்தத் தொலைநோக்கு நிறைவேறும் என்பதில் எனது அரசு நம்பிக்கை கொண்டுள்ளது. இந்திய மாநிலங்களில் ஒரு புதிய வளர்ச்சியின் முன்மாதிரியான தமிழகத்தை மாற்றுவதில் எனது அரசு உறுதி பூண்டுள்ளது**'' என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் எனது அரசும், தமிழ்நாடு தொழில் துறையில் சிறந்து விளங்க பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

- தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை மேலும் சிறப்பாக்கும் பொருட்டு உலகெங்கும் வாழ்ந்து வரும் தமிழர்களின் சீரிய ஆலோசனைகளை பெறவும், தமிழ்நாட்டில் தொழில் துவங்க முன் வரும் வெளிநாடு வாழ் தமிழ் மக்களுக்கு ரத்தினக் கம்பளம் விரித்து வரவேற்கவும், **''யாதும் ஊரே**'' என்ற புதிய திட்டத்தை நானே நேரடியாகச் சென்று அமெரிக்காவில் துவக்கி வைத்தேன். இந்தப் பயணத்தில், இங்கிலாந்து, அமெரிக்கா நாடுகளிலும், துபாயிலும் உள்ள தொழில் முதலீட்டாளர்களை சந்தித்து, அதன் மூலம் **8 ஆயிரத்து 835 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான முதலீடுகளை ஈர்த்து 41 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்து இடப்பட்டன. இதனால் 35 ஆயிரத்து 520க்கு மேற்பட்ட நபர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட உள்ளன.** மேற்படி ஒப்பந்தங்களில் **5** நிறுவனங்கள் செயல்பாட்டிற்கு வந்துள்ளன.

- தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம் மூலம் ஒற்றைச் சாளர அனுமதிகளை நேரடியாகக் கண்காணித்து விரைவுபடுத்திட, எனது தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது.
- இக்குழுவின் மூலம் **இதுவரை 14 ஆயிரத்து 728 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 36 தொழில் திட்டங்களுக்கு பல்வேறு அனுமதிகளும் வழங்கப்பட்டுள்ளன. 22 ஆயிரத்து 763 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் விரைவில் உருவாக்கப்பட உள்ளன.**
- மேலும், முதலீடு செய்வதை எளிதாக்குதல் பிரிவு, எனது அலுவலகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.
- பாதுகாப்பு மற்றும் வானூர்தி தொழில் பூங்கா, மின்சார வாகனப் பூங்கா ஆகியவை ஏற்படுத்தப்பட உள்ளன.
- Start-Up எனும் புத்தொழில்களை ஊக்குவிக்க தனிக் கொள்கை, தகவல் தொழில்நுட்பக் கொள்கை, வானூர்தி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை என தொழில் துறை மேம்பட பல்வேறு கொள்கைகளை வகுத்து, திட்டங்களை செயல்படுத்தி மாண்புமிகு அம்மாவின் அரசு வெற்றி கண்டு வருகிறது.
- குவைத் நாட்டைச் சார்ந்த அல் கராஃபி என்ற நிறுவனம் தூத்துக்குடியில் 49 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் சுற்றுச்சூழலுக்கு உதந்த BS – SIX பெட்ரோலியப் பொருட்களைத் தயாரிக்கும் ஒரு நவீன பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலை மற்றும் பெட்ரோ கெமிக்கல் உற்பத்தி தொழிற்சாலையை துவக்க உள்ளது. இதன் மூலம், சிங்கப்பூர் நாட்டின் ஜுராங்க் தீவு, குஜராத்தில் உள்ள ஜாம் நகர் மற்றும் தஹேஜ் போன்ற பகுதிகளில் ஏற்பட்ட வளர்ச்சியைப் போல, தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களும் சிறப்பான வளர்ச்சியைப் பெறும்.
- இது தவிர, உலகின் மிகப் பெரிய மின்சார வாகன உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான BYD, மாபெரும் மொபைல் போன் உற்பத்தி

நிறுவனங்களில் ஒன்றான விங்டெக் ஆகிய நிறுவனங்களும் தமிழ்நாட்டில் தங்களது புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள உள்ளன.

- தொழில் சிக்கல்கள் காரணமாக மூடப்பட்ட நோக்கியா நிறுவன தொழிற்சாலையினை வாங்கி, மின்னணு சாதன உற்பத்தியினை மேற்கொள்ள சால்காம் நிறுவனம் உடன்பாடு செய்துள்ளது.

- இவ்வாறு, முந்தைய காலங்களில் பல்வேறு காரணங்களால் செயல்படாமல் நின்ற தொழில் நிறுவனங்கள் கூட, தற்போது என்னுடைய அரசின் தொடர் முயற்சிகளால் புத்துயிர் பெறும் சிறப்பான சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

- அதே போல, இந்த அரசின் நல்லாட்சிக்கு ஒரு அத்தாட்சியாக வேளாண்மை, தொழில், மனித வள மேம்பாடு, பொது சுகாதாரம், உட்கட்டமைப்பு வசதிகள், சமூக நல திட்டங்கள் உள்ளிட்ட பத்து துறைகளில் எடுத்துக் கொள்ளப்பட்ட ஐம்பது குறியீடுகளின் அடிப்படையில், 2019–க்கான மத்திய அரசின் **நல் ஆளுமை குறியீட்டு அறிக்கையில் தமிழ்நாடு முதலாவதாக வந்து சாதனை படைத்துள்ளது.**

- தமிழ்நாட்டில் **அன்னிய நேரடி முதலீடு** கடந்த ஆண்டுகளில் ஒரு லட்சத்து 33 ஆயிரம் கோடி ரூபாய் என இருந்தது. கடந்த 3 ஆண்டுகளில் அது ஒரு லட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. அதாவது சுமார் 47 ஆயிரம் கோடி ரூபாய் அன்னிய நேரடி முதலீட்டினை மாண்புமிகு அம்மாவின் அரசு கூடுதலாக ஈர்த்துள்ளது என்பதை இங்கே பெருமையுடன் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

- நாட்டின் முன்னணி இதழான '**இந்தியா டுடே**' நடத்திய ஆய்வில் ஒட்டுமொத்த செயல்பாட்டில் இந்தியாவின் முதன்மை மாநிலமாக தொடர்ந்து இரண்டாவது முறையாக தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

- ஃபிராஸ்ட் அண்ட் சல்லிவன் (Frost & Sullivan) நிறுவனம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் ஒட்டு மொத்த செயல்பாட்டில் இரண்டாம் இடத்தை தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக தமிழ்நாடு பெற்றுள்ளது.

IT sector has been on a steady growth momentum in Tamil Nadu. Tamil Nadu is India's leader in the area of "Software as a Service". The broad industrial base, highly qualified and skilled man power, well developed infrastructure, surplus power position are some of the key strengths of the State.

Tamil Nadu is the third largest exporter and also has the highest number of operating Special Economic Zones in the country.

The State has been constantly attracting new investments across sectors. The recent investments by TCS and Infosys alone, are expected to create 31,000 direct IT sector jobs in the State.

சென்னை இன்று இந்தியாவின் தகவல் தொழில்நுட்ப தலைநகரம் என்று கூறுகின்ற அளவிற்கு பல புதிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தொடங்கப்பட்டு வருகின்றன. மிகப் பெரிய நிறுவனங்கள் தங்களுடைய கிளைகளை சென்னையில் திறந்துள்ளன. மற்ற நிறுவனங்களும் தங்கள் அலுவலகங்களை சென்னையில் தொடங்க விரும்புகின்றன.

எனவே பல்வேறு தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் தங்களுடைய தொழில்நுட்ப அலுவலகங்களை சென்னையில் அமைப்பதற்கு வசதியாக மற்றொரு பெரிய வளாகம் அமைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். இதற்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையில் டிட்கோவும், டி.எல்.எப். நிறுவனமும் கூட்டாக இணைந்து சென்னை, தரமணியில் 27.04 ஏக்கர் நிலப் பரப்பில் 5 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் தகவல் தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொழில் நுட்பம் சார்ந்த நிறுவனங்களுக்கான, பல்வேறு நவீன

வசதிகளுடன் ஒரு வளாகத்தினை அமைக்க உள்ளது. இதன் மூலம் **70** ஆயிரம் நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு உருவாக்க வாய்ப்பு உள்ளது.

Constant efforts are taken to improve the infrastructure in the I.T. corridor, in line with the growing needs. Many new projects like Phase II of Chennai Metro, widening of OMR Road with bye-passes at Kelambakkam and Thirupporur and fly-overs at various key junctions at a total cost of 1,150 crore Rupees, are being taken up.

I am very sure that, this new project by TIDCO and DLF will go a long way in further strengthening Tamil Nadu’s position as the most favoured investment destination in South Asia.

I wish TIDCO and DLF, all the very best, for the timely and successful completion of this project.

தொழில் முதலீட்டாளர்களை இருகரம் நீட்டி வரவேற்கும் அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு. அவர்கள் தொழில் தொடங்க அனுமதி மற்றும் அனைத்து கட்டமைப்பு வசதிகளையும் குறுகிய காலத்தில் வழங்குவதும் மாண்புமிகு அம்மாவின் அரசுதான். இதன் மூலம் தமிழ்நாடு இந்தியாவில் தொழில் வளர்ச்சியில் முதல் மாநிலமாக உயரும் என்பதை உறுதிபட இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

I assure the captains of industries present here that we will continue to fully support all your investments in Tamil Nadu.

இந்த விழாவினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**